

கழக தலைவர், முதல்வர் அவர்களின் 72வது பிறந்தநாளை முன்னிட்டு நந்திவரம் கூடுவாஞ்சேரி நகர தி.மு.க சார்பில் நகரச் செயலாளர் எம்.கே.டி.கார்த்திக் தண்டபானி தலைமையில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் – சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் கீதாஜீவன் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். இக்கூட்டத்தில் மாவட்ட கழக துணை செயலாளர்கள் வரலட்சுமி மதுசூதனன், எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



தமிழ்நாடு முதல்வர் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி சார்பில் மோரை ஊராட்சி பகுதியில் மாபெரும் பொதுக்கூட்டம் மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ தலைமையில் மாவட்ட துணை அமைப்பாளர் மோரை மு.சதீஷ் குமார் ஏற்பாட்டில் மாணவரணி செயலாளர் இரா.ராஜீவ் காந்தி சிறப்புரையாற்றினார். உடன் பேச்சாளர் செ.ஜோதி, மோரை கோ.தயாளன், மு.ராஜேந்திரன், புழல் நாராயணன், ஒய்.மா.அருள்தாசன், ஆர்.டி.மதன்குமார், மோரை ஆர்.திவாகர், சி.எஸ்.எஸ்.டி. சீனிவாசன், ஜி.கே.இனியன், கேபிள் த.வெல்கணேசன், உள்பட பலர் உள்ளனர்.

### சிறுபான்மையின சகோதர, சகோதரிகளின் அரணாக

# ‘திராவிட மாடல்’ ஆட்சி செயல்பட்டு வருகிறது!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பெருமிதம்!

திருவள்ளூர் மார்ச் 20

திருவள்ளூர் மாவட்டம் ஆவடியில் நடைபெற்ற இஃப் தார் நோன்பு திறக்கும் விழாவில் சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர் பங்கேற்றார்.

அல்மதினா நண்பர்கள் குழு மற்றும் மஸ்ஜிதே முஸ்தபா இணைந்து நடத்தும் இஃப் தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி ஆவடி வீட்டு வசதி வாரியக் குடி யிருப்பு அங்கன்வாடி மைதா னத்தில் நடைபெற்றது.

இதில் மஜிஸ்தே முஸ்தபா தலைவர் எஸ்.சையத் பரக்கத் துல்லாஹ் தலைமை வகித்தார்.

நிர்வாகிகள் அக்பார், சதகத்துல்லாஹ், தமீம் அன்



சாரி, மொய் தீன் பிச்சை, சலீம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அல்தினா நண்பர்கள் குழு ஒருங்கிணைப்பாளர் கே.மதனமுசாயர் வரவேற்றார்.

இந்நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் சா.மு. நாசர் கலந்து கொண்டு நோன்பு நிகழ்ச்சியை துவக்கி வைத்து உரையாற்றினார் .

அப்போது பேசிய அவர் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்கும் போதெல்லாம், சிறுபான்மைச் சமூகத்தின் மேம்பாட்டுக்கான பல்வேறு நலத் திட்டங்களை நமது தமிழ்நாட்டின் முதல்வர் தளபதி மு.கஸ்டாலின் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார் . அதனால்தான், வரலாற்றுப் பக்கங்களில் திராவிட முன்னேற்றக் கழகம், சிறுபான்மையின சமூகத்தின் பாதுகாவலனாக போற்றப்படுகிறது.

சிறுபான்மையின சகோதர, சகோதரிகளின் அரணாக திராவிட மாடல் ஆட்சி செயல்பட்டு வருகிறது.

சிறுபான்மை மக்களின் உரிமை, வாழ்வாதாரத்தை காப்பதில், தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயல்படுகிறது என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்

நிகழ்வில் ஆவடி மேயர் கு.உ தயகுமார், மண்டல குழுத் தலைவர் ஜி.ராஜேந்திரன், திமுக மாநகர செயலாளர் சண். பிரகாஷ், பூந்தமல்லி கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் ப.ச.கமலேஷ் மாநகராட்சி உறுப்பினர் சத்யா கோ. ரவி, வட்டச் செயலாளர் விஜயன், காங்கிரஸ் கட்சியின் மாவட்டத்தலைவர் இ.யுவராஜ், விசிக மாவட்டச் செயலாளர் மு.ஆதவன், உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### பகுதி செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமை! கழகத் தலைவர் முதல்வர் பிறந்த நாள் விழா

# பல்லாவரம் வடக்கு பகுதியில் நலத்திட்ட உதவிகள்- மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் தா.மோ. அன்பரசன் – திண்டுக்கல் ஐ.லியோனி – இ.கருணாநிதி எம்.எல்.ஏ., – எஸ். ஆர். ராஜா எம்.எல்.ஏ. சிறப்புரை !

பல்லாவரம் -20

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி பல்லாவரம் வடக்கு பகுதி திமுக சார்பாக கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டுநல திட்ட உதவிகள் வழங்கி மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (20. 3.2025 வியாழக்கிழமை ) மாலை 6:00 மணி அளவில் பழைய பல்லாவரம் குளத்து மேடு வேம்புலி அம்மன் கோயில் அருகில் பல்லாவரம் ரயில் நிலையம் அருகில் கூட்டம் நடைபெறுகிறது கூட்டத்திற்கு பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமை வகிக்கிறார் வட்டக் கழகச் செயலாளர் கள்டி. வி. ராஜா பி. ராஜ்குமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகிறார்கள் பகுதி கழக நிர்வாகிகள் ச. சிவக்குமார் இரா. சேகர் வ.முத்து பி. அம்பிகா எஸ். நெடுஞ்செழியன் ஜி. கருணாமூர்த்தி எம். இளங்கோ மீசை கே. ராதா, ஐ. கஜேந்திரன், சே. கன்னியப்பன், ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர் கழக கொள்கை பரப்பு செயலாளர் தமிழ்நாடு பாடநூல் நிறுவன தலைவருமான திண்டுக்கல் ஐ. லியோனி சிறப்புரையாற்றுகிறார். மாவட்ட கழக செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் அவர்கள் நல திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார் இந்நிகழ்ச்சியில் இளம் பேச்சாளர்கள் பம்மல் வீ. தினேஷ் செல்வி ரு. கீர்த்தனா ரு.தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ. காமராஜ் பல்லாவரம் தொகுதி பார்வையாளர் ரத்னா லோகேஸ்வரன் அ. தமிழ்மாறன், என். நவீன், மு. ரஞ்சன், கோல்ட் டி. பிரகாஷ் கோ. ஜானகிராமன் குளத்துமேடு மூ.நாகலிங்கம் க. ரமேஷ் த. ராஜாராமன் கே. தனசேகரன் வெ. தாமோதரன் மா. சந்திர கேஸ்வரன் ,

எம்.ஏ. டி. எஸ். விஜய், பா. ராஜா, பி. கே. ஏ. சத்திய பிரபு, ஜெ.இன்ஷா மாம என். எஸ். மதனகோபால் வீடியோ பி. ஹரி, ஜூலியன் அதிசயராஜ், எஸ் .ஹரி , ஜே. பிரசன்னா, எல். டில்லி பாபு, எஸ். சாகுல் ஹமீது, எம். இளவரசன், எல். ஆர். சதீஷ்குமார், எம். பிரகாஷ், ஆர். மணிமேகலை, ஒய். பத்ர் நிஷா, எம்.கே. கல்யாணி, ஆர். கோமதி, பி. லதா, வி. ஆதிலட்சுமி டி. லட்சுமி, வை.தா.ர. மூர்த்தி வி.கர்னல், வெங்கடேசன், பி.மீனா, ஆர். செந்தில்குமார், ஆ. ராமச்சந்திர ராஜா டி. பார்த்திபன் ராமகிருஷ்ணன், ஜே. சுரேஷ் குமார், செம்பாக்கம் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் ஏ. வீரபத்திரன், கே. பூபதி ,எச். பாஸ்கர், சரஸ்வதி சந்திரசேகர் டி. கார்த்திக், ஜி. ஜெகநாதன், ம. பர்குணன், ஓ. தண்டபாணி, சி. ஆர். மதுரை வீரன், பா. பாலச்சந்தர், பல்லாவரம் வடக்கு பகுதி செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் தே. இளங்கோவன், பி. பரமசிவம், எம். அந்தோணி, டி. எச். பிரான்சிஸ் பால், தமிழ் கோ. ரங்கநாதன், லதா சிவகுமார், ரேணுகா தேவி பரமசிவம், மங்கையர் திலகம் ராஜ்குமார், பிரேமலதா பண்டேரிநாதன், மற்றும் பல்லாவரம் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் செம்பாக்கம் வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் வட்டக் கழகச் செயலாளர் மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்கள் பல்லாவரம் வடக்கு பகுதி கழக இளைஞரணி அமைப்பாளர் சரத் வெங்கடேசன் நன்றி கூறுகிறார்.

### பூங்கொடி கோவிந்தராஜ் ஏற்பாட்டில் முதல்வர் பிறந்த நாள் விழா!

# 141 அ வட்டத்தில் 500 மகளிர்களுக்கு நல உதவிகள் வழங்கல்!

## மயிலை த.வேலு - ஜெ.கருணாநிதி வழங்குகின்றனர்!

சென்னை, மார்ச் 20 -

தெற்மேற்கு மாவட்டம் - மயிலை 141 அ வட்டம் சார்பில் முதல்வர் அவர்களின் பிறந்த நாள் விழா இன்று (20.3.25 வியாழக்கிழமை) கெனால்பேங்க் சாலையில் மாலை _4 மணிக்கு சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி சார்பில் பூங்கொடி ஆர். கோவிந்தராஜ் ஏற்பாட்டில் நடைபெறுகிறது.

மனித நேய மக்களின் முதல்வர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் 72 வது பிறந்த நாளை முன்னிட்டு 500 மகளிர்களுக்கு நலத்திட்டம் வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் சிறப்பு விருந்தினர்களாக சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் மயிலை த.வேலு தியாகராயர் நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கருணாநிதி கலந்து கொண்டு நல உதவிகள் வழங்கி சிறப்பிக்கின்றனர்.

இந்நிகழ்சசியில் பகுதி கழக செயலாளர் கே.ஏழுமலை, வட்ட கழக செயலாளர் எஸ். லட்சுமி காந்தன், மாமன்ற உறுப்பினர் ராஜா அன்பழகன், சென்னை தென்மேற்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் மயிலை ஆர். பாலு, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் மோனிஷா கருணாநிதி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து சிறப்பிக்கின்றனர்.

எனவே கழக தோழர்கள் அனைவரும் திரளாக கலந்து சிறப்பிக்கும் படி 141.அ.வட்ட கிளை கழகம் சார்பில் கேட்டுக் கொண்டுள்ளனர்.




சென்னை வடகிழக்கு மாவட்டம், சோழவரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பாக தமிழக முதல்வர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாநில அளவிலான மாபெரும் கைப்பந்துப் போட்டி பாடியநல்லூர் ஊராட்சியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் சோழவரம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் மீ.வே.கர்ணாகரன் தலைமை தாங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு போட்டியை துவக்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு முதல்பரிசு, இரண்டாம்பரிசு, மூன்றாம் பரிசு, நான்காம் பரிசுகளுடன் கோப்பைகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியை சோழவரம் ஒன்றிய தி.மு.க. ஏற்பாடு செய்திருந்தது.

### பல்லாவரம் சட்டமன்றத் தொகுதியில் – உணவு துறை சார்பில்

# உதவி ஆணையர் அலுவலகம் அமைக்கப்படுமா?

## சட்டப்பேரவையில் இ.கருணாநிதி கேள்வி!

சென்னை, மார்ச்.20-

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை சார்பில் உதவி ஆணையர் அலுவலகம் அமைக்கப்படுமா? என்று பல்லாவரம் இ.கருணாநிதி கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு :-



**கருணாநிதி:** பல்லாவரம் சட்டமன்ற தொகுதியிலே உதவி ஆணையர் அலுவலகம் இல்லாமல் உள்ளது. குறிப்பாக அந்த தொகுதியிலிருந்து 40 நியாய விலைக் கடைகள் இருக்கின்றன. அதிலே சட்டப்பேரவையினுடைய தொகுதி மேம்பாட்டு நிதியில் மட்டும் சுமார் 25 கட்டடங்கள் கட்டப்பட்டன. பொதுவாக பொதுமக்கள் தங்களுடைய பெயர் மாற்றங்களோ, விலாச மாற்றங்களோ திருத்தங்கள் என்று சொன்னால் கிட்டத்திட்ட 7 கி.மீ. செல்ல வேண்டியிருக்கின்றது.

ஆகவே, அந்தத் தொகுதியிலிருந்து ஆலந்தூர் தொகுதிக்கும், தாம்பரம் தொகுதிக்கும் செல்ல வேண்டியி ருப்பதால், புதிதாக உதவி ஆணையர் அலுவலகம் கட்டப்பட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தேன். அமைச்சர் அவர்கள் செய்து தருவதாக உறுதியளித்தார். ஆகவே, உதவி ஆணையர் அலுவலகம் அமைக்கப்படுமா?

**அமைச்சர் அர.சக்கரபாணி:** உறுப்பினர் அவர்களும், தாம்பரம் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் அவர்களும், இரண்டு பேரும் என்னிடத்தில் இந்தக் கோரிக்கையை பல முறை வைத்திருக்கிறார்கள். கண்டிப்பாக அது அமைக்க வேண்டிய ஒன்று. வருகின்ற காலத்திலே, கண்டிப்பாக அங்கே AC (Assistant Commissioner) அலுவலகம் அமைப்பதற்கு துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.


